2018 ஜனவரி 10]

சொல்லியிருந்தேன். இந்த வாரத்திற்குள் நில எடுப்புப் பணிகள் முடிந்துவிட்டால், உடனடியாக அந்தப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

பாதாள சாக்கடைத் திட்டம்

***369—திரு. எஸ்.ஆர். இராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம்மூலம் திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை பெறப்பட்டவுடன் உரிய நிதி ஆதாரங்களைப் பெற்று பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

முற்பகல் 10–20

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செம்பாக்கம் நகராட்சி என்பது வளர்ந்து வருகின்ற நகராட்சி. கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் செம்பாக்கம், பெருங்களத்தூர், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை பகுதிகளுக்கு பாதாள சாக்கடை அமைக்க திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டன. அப்போது* JNNURM scheme, *இப்போது* AMRUT scheme, *திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்யப்பட்டு,* tender *விடும் நிலையில் அந்தப் பணிகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, வேகமாக வளர்ந்துவரும் சென்னையை ஒட்டியுள்ள இந்தப் பகுதியில் மிக முக்கியமான பிரச்சினை அடுக்குமாடிக் கட்டடங்கள் அதிகமாக இருக்கின்றன. குறிப்பாக,* CMDA*–ல்* Second Master Plan *என்று சொல்லப்படுகின்ற வகையில் முக்கால் கிரவுண்டில் 4 வீடுகளும், ஒரு கிரவுண்டில் 6 வீடுகளும் கட்டக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அந்தக் குடியிருப்புகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் எல்லாம் ஏரிகளுக்குச் செல்கிறது. ஆகவே, உடனடியாக இந்தப் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்று சொன்னால் தாம்பரத்தை மையமாக வைத்து, குறிப்பாக, தாம்பரம், பல்லாவரம் போன்ற வேகமாக வளர்ந்துவரக்கூடிய பகுதிகளை மாநகராட்சியாக அறிவித்தால், அதன் மூலமாக மக்களுக்கு மிகப் பெரிய விடிவுகாலம் ஏற்படும் என்று நான் கருதுகின்றேன். குறிப்பாக, நான் நகர மன்றத் தலைவராக இருந்தபோது தாம்பரத்தில் தொடங்கப்பட்ட பாதாள சாக்கடை அமைக்கும் பணி இன்னும் முடிவடையவில்லை. அப்போது நாங்கள் வைப்பு நிதி 5,000 ரூபாய்தான் என்று சொன்னோம். இப்போது தாம்பரம் நகராட்சியில் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்கும்போது, பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு எவ்வளவு பணம் கேட்கின்றார்கள் என்று சொன்னால், 70,000 ரூபாய் என்று சொன்னார்கள். உண்மையிலேயே நான் பிரமித்துப் போய்விட்டேன். 5 ஆயிரம் ரூபாய் எங்கே இருக்கின்றது, 70 ஆயிரம் ரூபாய் எங்கே இருக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, இதையெல்லாம் மனதில் வைத்து, மாநகராட்சி ஆக்குவதற்கும், இதையெல்லாம் உள்ளடக்கி பெருங்களத்தூர், அகரம் பஞ்சாயத்துகளை ஒருங்கிணைத்து ஒரு திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2018 ஜனவரி 10]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம், செம்பாக்கம் நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி 45,356 ஆகும். இந்நகராட்சி 6.25 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 15 வார்டுகளை உள்ளடக்கியதாகும். செம்பாக்கம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று இந்த நகராட்சியைப் பொறுத்தவரையில், இப்போதுதான் திட்ட அறிக்கையை தயார் செய்துவருகின்றோம். நீங்கள் சொன்னதைப்போல் உங்கள் ஆட்சியில் 55 திட்டங்களை எடுத்திருந்தார்கள். அதில் 20 திட்டங்களை மட்டும்தான் செயலாக்கத்திற்கு எடுத்திருந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதற்கான நிதியை ஒதுக்கித் தந்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் 21 திட்டங்களை எடுத்துக்கொண்டார்கள். அவற்றில் 5 பேரூராட்சிகளை எடுத்தார்கள். இந்தப் பாதாள சாக்கடைத் திட்டங்களைப் பார்த்தீர்களென்றால், அதில் சுத்திகரிப்பு நிலையம் என்பது ஒரு முக்கியமான பிரச்சினையாகும். அதேபோன்று நிதி ஆதாரமும் இதற்கு அதிக அளவில் தேவைப்படுகிறது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குப் பின்னால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்ததற்குப் பின்னாலும்கூட விதி 110–ன்கீழ் இந்த ஆண்டு வேலூர் மாநகராட்சி, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகள், கும்பகோணம், ராஜபாளையம், ஆம்பூர், திண்டிவனம், செங்கல்பட்டு போன்ற நகராட்சிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் எண்ணப்படி, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது படிப்படியாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மற்ற பணிகள் போன்று விரைவாக செய்யக்கூடிய சூழ்நிலை இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தில் இல்லை. இதில் சுத்திகரிப்பு நிலையம் என்பது ஒரு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. ஓர் இடத்தை எடுத்துக்கொண்டால், அந்த இடத்தில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக் கூடாது என்று சொல்கின்றார்கள், அதை எதிர்த்து உடனடியாக நீதிமன்றத்திற்கும் செல்கின்றார்கள். காரைக்குடியில்கூட பாதாள சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டு,*

பசுமைத் தீர்ப்பாயத்திற்கு சென்று நீண்ட நாள்கழித்து இப்போதுதான் தீர்ப்பை வாங்கி இருக்கின்றோம். இப்படி ஒரு சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே கண்டிப்பாக சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரி, நிதி ஆதாரத்திற்குத் தகுந்தாற்போல் இந்தத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதை நான் ஏற்றுக்கொள்கின்றேன். இருந்தாலும், சென்னையில் இந்தப் பகுதிகள் மிக வேகமாக வளர்ந்து வருகின்ற பகுதிகளாகும். இப்போது நகரப் பகுதியில் வந்து குடியேறுபவர்கள் 50 சதவிகிதத்தை நெருங்கிவிட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் நீங்கள் இந்தத் திட்டத்தைச் செய்தாலும், முதல் பணியாக நான் கூறிய அந்த நகராட்சியை, தாம்பரத்தை உள்ளடக்கிய அந்தப் பகுதியில் உள்ள பணிகளையெல்லாம் உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதையொட்டி இன்னுமொரு முக்கியமான செய்தியை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன். தேசிய நெடுஞ்சாலை என்பது தாம்பரத்தின் மையப் பகுதியில் செல்கின்றது. மார்க்கெட் பகுதியும் பக்கத்தில் இருக்கின்றது. பேருந்து நிலையமும் பக்கத்தில் இருக்கின்றது.* Third Terminal Railway Station*–ம் இப்போது தாம்பரத்தில் வருகின்றது. எனக்குத் தெரிந்தவரையில் குறைந்தது ஒரு நாளைக்கு 8 இலட்சம் மக்கள் தாம்பரம் நகரத்திற்கு வந்து செல்லக்கூடியவர்களாக இருப்பார்கள். தி. நகருக்கு அடுத்து பெரிய மார்க்கெட் தாம்பரம் மார்க்கெட். ஒரு பேருந்து நிலையம் மையப் பகுதியில் இருக்கின்றது. ஆனால் அந்த மையப் பகுதியில் இருக்கின்ற பேருந்து நிலையத்தில் பேருந்துகள் நிற்பது இல்லை. அங்கே நடைபாதை கடைகள் இருக்கின்றன, இரண்டு சக்கர வாகனங்கள் இருக்கின்றன, நகராட்சிக் கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. இதனால் என்ன விளைவு ஏற்படுகின்றது என்று சொன்னால், 24 மணி நேரமும் மக்கள் வந்து செல்லக்கூடிய அந்தப் பேருந்து நிலையத்தில்* bath room *இரண்டு இருக்கின்றன. இருந்தாலும்கூட அவை எங்கே இருக்கின்றன என்று தேட வேண்டும். ஆகவே உடனடியாக அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஆக்கிரமிப்புகளை அகற்றி பேருந்து நிலையமாக வைத்தால்,* traffic *குறையும், பொதுமக்களும் பயன்பெறுவார்கள். இதனை பல அரசு*

2018 ஜனவரி 10]

அதிகாரிகளிடம் சொல்லிவிட்டேன். இதனை மாவட்ட ஆட்சித் தலைவரின் கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கின்றேன். இதனை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் அன்போடு கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாமல் இருந்தாலும்கூட, மக்களுடைய அவசியத்தைக் கருதி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். இது சம்பந்தமாக துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்யப்பட்டு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.

முற்பகல் 10—25

திரு. க.நா. விஜயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். நல்லாட்சி நடத்தி வருகின்ற நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். திருப்பூர் மாநகராட்சியில் கிட்டத்தட்ட 29 வார்டுகள் உள்ளன. ஏற்கெனவே ஊராட்சிப் பகுதியிலிருந்த 14 வார்டுகளைச் சேர்த்து 29 வார்டுகளைக் கொண்ட அந்தத் திருப்பூர் வடக்கு சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் ஏற்கெனவே 11 வார்டுகளில்தான் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 18 வார்டுகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்படவில்லை. அந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிறைவேற்றித் தருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

[2018 ஜனவரி 10

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாநகராட்சிக்கு முழுமையாக உட்பட்ட தொகுதி மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய தொகுதி. எனவே, உடனடியாக துறை அலுவலர்களால் ஆய்வு செய்யப்பட்டு, விடுபட்ட பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நல்லதம்பி அவர்கள்.

திரு. அ. நல்லதம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் தளபதி அவர்களையும் வணங்குகிறேன். வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதிக்குட்பட்ட திருப்பத்தூர் நகராட்சிப் பகுதியில் தற்போது நடைபெறுகின்ற பாதாள சாக்கடைத் திட்டத்தால் சுமார் 86 கி.மீ. நீளத்திற்கு சாலைகள் தோண்டப்பட்டு குழாய்கள் பதிக்கப்பட்டு வருவதால், அனைத்துச் சாலைகளும் மண் சாலைகளாக மாற்றப்பட்டு, போக்குவரத்திற்குப் பெரும் இடையூறாகவும் விபத்துகள் நடைபெறும் நிலையிலும் உள்ளன. வியாபாரப் பொது மக்கள் கடைகளை அடைத்து போராடக்கூடிய மனநிலையில் உள்ளார்கள். ஆக, தோண்டப்பட்ட தார்ச் சாலைகளை சிமெண்ட் சாலைகளாக அமைக்க இந்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து விரைவில் சாலைகளை அமைத்துத் தருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கைதான். இதற்கு முன்னர் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் நடைபெறும்போது சாலையைத் தோண்டி main connection கொடுக்கும்போது மட்டும் main pipeline போடுவார்கள். அதேபோன்று, இரண்டாவதாக, house connection கொடுக்கும்போது ஒவ்வொருவருடைய விண்ணப்பத்திற்குத் தகுந்தவாறு மீண்டும் சாலையைத் தோண்டி இணைப்பு கொடுக்கப்படும். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

2018 ஜனவரி 10]

உத்தரவிற்கிணங்க, தற்போது ஆரம்பிக்கப்படும் திட்டங்களைப் பார்த்தீர்களானால், main pipeline *போடும்போதே* house connection*–னும் கொடுத்துவிடுகிறோம். இத்திட்டம் வேறு எங்குமே கிடையாது. தற்போதுதான்* implement *செய்திருக்கிறோம். அது மட்டும் அல்ல, அவ்வாறு போடும்போது, எவ்வளவு அடிக்கு— அதாவது, 4 அடிக்கு* earth work *செய்யப்படுமேயானால், அந்த இடத்திற்கு மட்டும் சிமென்ட்* patch *போடுவது போன்ற சூழ்நிலை இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இத்திட்டம் குறித்து திரும்பவும் பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார். எனவே, முழுமையாக சாலைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பல இடங்களிலிருந்து இதுபோன்ற புகார்கள் வருகின்றன. கண்டிப்பாக தனிக் கவனம் செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. மூர்த்தி அவர்கள்.*

திரு. பி. மூர்த்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்டிருக்கக்கூடிய 28 வார்டுகளில், மதுரை கிழக்குத் தொகுதியில் 11 வார்டுகளுக்கு மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் 5 முறை சட்டமன்றப் பேரவையில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும் என்று அறிவித்து, திட்டமும் தயாராக இருக்கிறது. சென்னைக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடிய மதுரை மாநகராட்சிக்கு இந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தை உடனடியாக மேற்கொள்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதி ஒதுக்குவார்களா என்பதனை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்தபோது அவற்றுக்கான நிதி ஒதுக்கப்பட்டது. கண்டிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை சம்பந்தமான பணி வேகமாக ஆரம்பிக்கப்படும். (குறுக்கீடு) இந்தத் திட்டம் கண்டிப்பாக வேகமாக நடைபெறும். இதற்கு முன்னால்,*

first batch *அவர்களது ஆட்சிக்காலத்தில் நிதியொதுக்கப்பட்டு, தொடங்கப்பட்ட பழைய பாதாள சாக்கடை திட்டங்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியுள்ளார்கள். தற்போது விடுபட்ட பகுதிகளுக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் நிதி ஒதுக்கியுள்ளார்கள். இத்திட்டம் கண்டிப்பாக வேகமாக எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுரேஷ் ராஜன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா (குறுக்கீடுகள்) வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.*

14—

கல்லூரிக்குக் கட்டடம்

***3227—திரு. என். சுரேஷ் ராஜன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகர்கோவில் தொகுதி, வடசேரியிலுள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் புதிய கட்டடம் கட்டவும், புதிய பாடப் பிரிவுகள் துவக்கவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தொகுதி, வடசேரி நெசவாளர் தெரு, அரசு உயர்நிலைப் பள்ளியில் தற்காலிகமாக செயல்பட்டு வந்த இப்புதிய அரசு கலைக் கல்லூரிக்கு நாகர்கோவில், கோணம் பகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி அமைந்துள்ள வளாகத்தில், புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, தற்போது இக்கல்லூரியானது 5–9–2017 முதல் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.